

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 06.09.2026

# ஓடு... ஓடு... ஓடு...

**கரூரில் ஓடிய விஜய், சட்டமன்றத்தில் இருந்தும் ஓடி இருக்கிறார். எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ளத் துணிச்சல் இல்லாதவர் என்பதை தினமும் நிரூபித்துக் கொண்டு இருக்கிறார் விஜய்.**

**“வரும் திங்கட்கிழமை பதிலுரை அளிக்கிறேன். நான் பதிலுரை தரும்போது, யாரும் எழுந்து ஓடிறக் கூடாது” என்று சொல்லி விட்டு முதலமைச்சர் விஜய் என்ன செய்தார்? அதைச் சொல்லிவிட்டு ஓடிவிட்டார். இதுதான் தமிழ்நாடு சட்டமன்றத்தை அவர் மதிக்கும் லட்சணமா?**

காவல் துறையை முதலமைச்சர் விஜய் கையில் வைத்துள்ளார். அத்துறையின் சார்பில் மானியக் கோரிக்கை விவாதம் நடக்கிறது. ஒவ்வொரு உறுப்பினர் பேசுவதையும் உன்னிப்பாக கவனித்து, குறிப்பு எடுத்து வைத்துக் கொண்டு அதற்கு பதில் சொல்ல வேண்டியது அவரது கடமை ஆகும்.

மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலுரை என்பதை இறுதியாகச் சொல்லலாம் என்றாலும், மிக முக்கியமான குற்றச்சாட்டுகளுக்கு அவ்வப்போது பதில் சொல்வது அவையின் மரபு ஆகும். அமைச்சர்களின் கடமையும் ஆகும். அதைக்கூட முதலமைச்சர் விஜய் செய்வது இல்லை. நகராட்சி நிர்வாகத் துறை அவர் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. அதற்கான மானியக் கோரிக்கையை அவர் தான் தாக்கல் செய்தார். ஆனால் பதிலுரை வழங்கியது பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்.

சட்டம் ஒழுங்கு பற்றி இதுவரை எழுப்பப்பட்ட கேள்விகள் எதற்கும் காவல் துறையை கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் விஜய் பதில் சொல்லவில்லை. சட்ட அமைச்சர் நிர்மல்குமார், பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் ஆகியோர்தான் பதில் சொல்லி இருக்கிறார்கள். பேசக் கூடாது என்று சபதம் எடுத்து விட்டு உட்கார்ந்து இருக்கிறாரா, அல்லது அவருக்கு எதுவுமே தெரியாதா எனத் தெரியவில்லை.

**டயலாக்குகளை மனப்பாடம் செய்து விட்டு அதை வெளிப்படுத்துகிறாரே தவிர விவாதங்களில் பங்கெடுத்து விளக்கம் சொல்லக் கூடியவராக அவர் இல்லை. அப்படி எண்ணமும் இல்லை. ஒருவேளை இவை எல்லாம் தேவையில்லை என்று நினைக்கிறாரா? அப்படி நினைத்தால் அதை விட சபையை அவமானப்படுத்தும் செயல் ஏதும் இருக்க முடியாது.**

**எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி அவர்களுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு உறுப்பினரது கேள்விகளுக்கும் பதில் அளிக்கும் கடமையும் பொறுப்பும் முதலமைச்சருக்கு இருக்கிறது. அவர் பதில் சொல்லப் போவதில்லை என்றால் அவர் அவைக்கு வரவும் தேவையில்லை. பேரவைக் கூட்டத் தொடரை நடத்தத் தேவையும் இல்லை. முதலமைச்சர் முன்னால் ஒரு கருத்தைச் சொல்லி அதில் அவரது பதிலைப் பெற்று, நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குத்தான் சபை கூடுகிறதே தவிர, சம்பிரதாயத்துக்காக அல்ல. அந்தச் சிறு கடமையைக் கூடச் செய்யாத, செய்யத் தெரியாத, செய்ய விரும்பாத, செய்ய நினைக்காத, செய்ய வேண்டும் என்பதை உணராத, செய்ய வேண்டும் என்பதை அறியாத ஒருவரின் கையில் தமிழ்நாடு சிக்கி இருப்பதை நினைத்தால் வேதனையே எழுகிறது.**

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி, ஒரு மணிநேரத்துக்கும் மேலாக பல்வேறு குற்றச்சாட்டுகளை அடுக்கி வைத்தார். பொதுவான குற்றச்சாட்டுகளுக்கு அந்த நேரத்திலேயே முதலமைச்சர் பதில் அளித்திருக்கலாம். குறிப்பான குற்றச் சாட்டுகளுக்குத்தான் பதில் வாங்கிவிட்டு பின்னர் பதிலுரையில் சொல்லலாம். ‘நீங்கள் பதிலுரை சொல்லும் போது இதற்கெல்லாம் பதில் அளிக்க வேண்டும்’ என்றுதான் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி கேட்டுக் கொண்டார். ‘பதில் சொல்வேன்’ என்று சொல்லி விட்டு முதலமைச்சர் விஜய் அமர்ந்திருக்க வேண்டும். மாறாக, ‘நீங்கள் ஓடிவிடக் கூடாது’ என்று முதலமைச்சர் விஜய் சொன்னதைக் கூட கிண்டலாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால், தனது துறையின் சார்பில் விவாதம் நடக்கும் போது, அதுவும் எதிர்க்கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கும் போது முதலமைச்சர் விஜய் அவையை விட்டு ஓடியது எந்த வகையில் நியாயம்?

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி வைத்த ஒவ்வொரு குற்றச்சாட்டும் அந்தளவுக்கு அனலாக இருந்தது. முதலமைச்சர் விஜய்யை உட்கார விடாமல் அவஸ்தைக்கு உள்ளாக்கியது. பதில் சொல்லவும் முடியவில்லை. உட்கார்ந்து கேட்கவும் முடியவில்லை.

‘உலகப் புகழ் பெற்ற பொற்கால ஆட்சியை வழங்கி வருகிறேன்’ என்ற மிதப்பில் முதலமைச்சர் விஜய் உட்கார்ந்து இருக்க, ‘இது மாற்றமல்ல, நாற்றம்’ என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி அம்பலப்படுத்தினார். இதைக் கேட்டுத் தான் ஓடினார் முதலமைச்சர் விஜய். உண்மையில் இவை அனைத்தும் அவருக்கே தெரியாத தகவல்களாகத்தான் இருக்கும். ‘சூப்பர்ண்ணா’ என்று சுற்றி இருப்பவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டு இருந்த விஜய்க்கு, நாட்டின் நிலைமையை உணர வைத்துவிட்டது உதயநிதியின் உரை. ‘படம் சூப்பர் பிளாப்’ ஆனால் நடிகர்கள் வெளிநாட்டுக்கு ஓடுவதைப் போல ஓடினார் முதலமைச்சர் விஜய்.

**சட்டசபையில், மாநிலத்தின் முதலமைச்சர் உட்கார முடியாமல் ஓடியது இதுதான் முதல் முறையாக இருக்கும். 100 நாளில் விஜய்யின் பிம்பம் கிழிந்து தொங்குகிறது. அவரே அதைக் கிழித்துக் கொண்டிருக்கிறார் என்பதைத்தான் அவர் ஓடியதன் மூலமாக உணர முடிகிறது.**

சமூக வலைத்தளத்தில் ஒருவர் எழுதி இருப்பது கமெண்ட் அல்ல, அரசியல் வரலாற்றுக் கல்வெட்டு...

“ஆளுநர் ரவியை ஓட விட்டார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்...

முதலமைச்சர் விஜய்யை ஓட விட்டார் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி...

இந்தியக் குடியரசு வரலாற்றில் இது புதுசு...” - என்று எழுதி இருக்கிறார்.

ஓடுவது கேவலம்.

ஓட விடுவது கம்பீரம்.

# முதலமைச்சர் அவையில் இருக்கும்போது மற்ற அமைச்சர்களின் பதில் எதற்கு?

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் குற்றச்சாட்டு... முதல் பக்கத் தொடர்ச்சி

இடத்தில் இருக்கிறீர்கள். உங்களிடம் கேள்வி கேட்கவேண்டிய இடத்தில் நாங்கள் இருக்கிறோம். உங்களிடம் சரியான கேள்வியைக் கேட்டுப் பதில் வாங்கும் கடமை எங்களுடையது. அந்தப் பொறுப்பைத்தான் மக்கள் எங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். ஆகவே, வெறும் ‘ரீல்ஸ்’ கருத்தாக இல்லாமல், ‘ரீல்ஸ்’ உள்ளடக்கத்திற்காக இல்லாமல், `ரோல், கேமரா, ஆக்சன்’ நிலைக்கு வராமல், திசைதிருப்பாமல், சம்பந்தமே இல்லாமல் லாஜிக்கே இல்லாத குட்டிக் கதைகள் சொல்லாமல், மக்களுடைய கேள்விகளுக்கு, எங்களுடைய கேள்விகளுக்கு முதலமைச்சர் நேரடியாகப் பதில் சொல்ல வேண்டும் என்று பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு கொள்கின்றேன்.

### முதலமைச்சர் பதில் சொல்லத் தயாரா என்றுதான் கேட்கிறேன்!

பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை சம்பந்தப்பட்ட மானியம், நான் ஏற்கனவே சொன்னதுபோல, யார் பொறுப்பெடுத்துப் பதில் சொல்ல வேண்டுமோ அவர்கள் சொல்ல மாட்டேன் என்கிறார்கள். மற்ற அமைச்சர்கள் எல்லாம் பதில் சொல்கிறார்கள். அதை நான் மீண்டும் பதிவு செய்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறார் என்று நீங்கள்தான் சொன்னீர்கள். அவர் தயாராக இருந்தால், அவர் பதில் சொல்ல வேண்டும். அதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசும்போது, எங்களுடைய ஆட்சியில் சில குற்றங்கள் நடந்தன, குறைபாடுகள் இருந்தன என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் இந்த நேரத்தில் பதில் சொல்ல வேண்டும்.

குறிப்பாக, டி.ஜி.பி நியமனத்தில் எதற்காகத் தாமதம் ஏற்பட்டது, ஏன் பொறுப்பு டி.ஜி.பி. போட்டிருந்தீர்கள்? என்று கேட்டிருக்கிறார். எங்கள் ஆட்சியில் டி.ஜி.பி.யாக இருந்த திரு.சங்கர் ஜிவால் ஐ.பி.எஸ். அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு, டி.ஜி.பி நியமனத்திற்காக எங்களுடைய கழக அரசு சார்பாக, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு (UPSC) ஒரு பட்டியலைத் தேர்வு செய்து அனுப்பியிருந்தோம். அப்போது மாநில அரசுக்கும், யூ.பி.எஸ்.சி.க்கும், டி.ஜி.பி தேர்வுக் குழுவில் யார் யார் இடம் பெற வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து இருந்தது. தமிழ்நாட்டிற்கான டி.ஜி.பியை நியமிப்பதில் யூ.பி.எஸ்.சி.யினுடைய பங்கு, அதாவது ஒன்றிய அரசினுடைய தலையீடு அதிகமாக இருக்கிறது என்று எங்களுடைய அரசு அன்று கருதியது.

இது மாநில உரிமைகளுக்கு எதிரானது. சட்டம் ஒழுங்கு என்பது மாநில அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. மாநில அரசுக்கு ஏற்ற அதிகாரியை டி.ஜி.பி.யாக பணியமர்த்தினால் தான் அரசோடு சேர்ந்து ஒன்றிணைந்து செயல்பட முடியும், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியும் என்று எங்களுடைய முதலமைச்சர் அன்று அந்த முடிவை எடுத்தார்கள். எங்களுடைய கழக அரசு அதை எதிர்த்து நீதிமன்றத்திற்கும் சென்று வழக்குப் போட்டது.

### சட்டம் – ஒழுங்கைப் பாதுகாக்க எங்கள் முதல்வர் எடுத்த நடவடிக்கை!

இதற்கிடையே மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படக் கூடாது என்பதால், பொறுப்பு டி.ஜி.பி.யை அன்று எங்களுடைய முதலமைச்சர் நியமனம் செய்தார்கள். அவர் உடல்நிலை சரியில்லை என்று விடுப்பில் சென்றதால், மூத்த ஐ.பி.எஸ் அதிகாரியான திரு.அபய்குமார் சிங் ஐ.பி.எஸ்.ஐ, டி.ஜி.பியாக நியமித்தோம். இதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறது. சட்டத்திற்கு உட்பட்டுத்தான் எங்களுடைய தலைவர் அவர்கள், இதைச் செய்திருக்கிறார்கள். இதில் எந்தச் சட்ட விரோதமும் கிடையாது.

‘போக்சோ’ வழக்குகள் எங்களுடைய ஆட்சியில் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்று இங்கே ஒரு குற்றச்சாட்டை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார். போக்சோ குற்றங்களைத் தடுக்க, எங்களுடைய தலைவர் தலைமையிலான அரசு மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது.

தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் நம்பிக்கையை நாங்கள் ஏற்படுத்தினோம். அதனால் ஏற்பட்ட விழிப்புணர்வின் காரணத்தால்தான் பாதிக்கப்பட்டவர்கள் தயக்கமின்றிப் புகாரளிக்க முன்வந்தார்கள். அதனால் வழக்குகள் பதிவு அதிகமாகியது. அப்படிப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் உடனுக்குடன் புலன் விசாரணை நடத்தி, குற்றவாளிகளுக்கு உடனடியாகத் தண்டனையும் வாங்கிக் கொடுக்கப்பட்டது.

### ஆலோசனைக் கூட்டம்!

குறிப்பாக போக்சோ வழக்குகளைக் கையாள்வது தொடர்பாக, அப்போது சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் மூலமாக, அதற்கு அமைச்சராக இருந்த என்னுடைய தலைமையில் மூன்று சிறப்பு ஆய்வுக் கூட்டங்களை நான் நடத்தியிருக்கிறேன்.

செப்டம்பர் 2023இல் காவல்துறை, சுகாதாரத்துறை, பள்ளிக்கல்வித் துறை, சமூகநலத் துறை, சட்டத்துறை இப்படி பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினேன்.

அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, பாதிக்கப்பட்டவர்களுடைய உரிமையை எப்படிப் பாதுகாக்க வேண்டும், அவர்களை எப்படிக் கண்ணியமாக நாம் நடத்த வேண்டும், பள்ளிகளில் என்ன மாதிரி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு உடனே போய்ச் சேர்வதை உறுதி செய்ய வேண்டும், சட்ட உதவிகளை வழங்குவது எப்படி என்று வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டன. ஆகவே எங்கள் ஆட்சியில் அதிகமான போக்சோ குற்றங்கள் நடந்தன என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது.

### தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்திய போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள்!

இன்னொரு குற்றச்சாட்டும் தொடர்ந்து வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள். இதை ஏற்கனவே அவையில் பதிவு செய்துள்ளேன். போதைப்பொருட்கள் ஒழிப்பில் எங்களுடைய அரசு சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறுகிறீர்கள். நாங்கள் போதைப்பொருள் ஒழிப்பைச் சரியாகச் செய்யவில்லை என்றால், மதுவிலக்கு மற்றும் கலால் துறையில் அதிகாரிகளாக அன்று செயல்பட்ட திரு. மகேஷ் குமார் அகர்வால் ஐ.பி.எஸ். அவர்களை நீங்கள் ஏன் இன்றைக்குப் பதவி உயர்வு செய்து தமிழ்நாட்டினுடைய டி.ஜி.பி.யாகப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறீர்கள் என்ற கேள்வியை வைக்கிறேன்.

## எங்கள் தயவில் நடக்கும் ஆட்சி இது!

எங்களுடைய ஆட்சிக் காலத்தில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட திரு. அமல்ராஜ் ஐ.பி.எஸ். அவர்களை இன்றைக்கு ஏன் பதவி உயர்வு செய்து, சென்னை மாநகர காவல் ஆணையராக வைத்திருக்கிறீர்கள் என்ற கேள்வியையும் இந்த அரசிடம் நான் வைக்கிறேன். (குறுக்கீடு)

**கடைசியாக யார் ஓடிப்போனார்கள் என்று எல்லாருமே பார்த்திருப்பார்கள். இதை டி.வி.யில் காட்டினீர்களா என்று தெரியவில்லை.**

பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் இந்த பதிலை ஒரு மணி நேரத்திற்கு முன்பே சொல்லியிருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. ’எல்லாரும் அமைதியாக இருங்கள், நான் இப்போது செல்கிறேன். நான் 3 நாளில் தயாராகி வருகிறேன்’ என்று சொல்லியிருக்கலாம். இதைத்தான் நான் சொன்னேன்; தயாராகி வாருங்கள் என்றுதான் சொன்னேன்.

### சிங்கப்பெண்களுக்கே பாதுகாப்பு இல்லை!

பேரவைத் தலைவர் அவர்களே, ‘சிங்கப் பெண்’ படை அமைத்துவிட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

தூத்துக்குடி மாவட்டத்தில், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த ஒரு பெண் காவலருக்கே இந்த ஆட்சியில் பாலியல் தொல்லை கொடுக்கப்பட்டுள்ளது. சிங்கப் பெண்களுக்கே பாதுகாப்பு இல்லை. அந்த நிலைமையில்தான் இந்த ஆட்சி சென்று கொண்டிருக்கிறது.

அதேபோல், நான் துணை முதலமைச்சராக இருக்கும்போது, நான் அவைக்கே வரவில்லை என்ற குற்றச்சாட்டை அமைச்சர் அவர்கள் இங்கு வைத்துள்ளார். தினமும் அவைக்கு நான் வந்துள்ளேன். வருகைப் பதிவேட்டை எடுத்துப் பாருங்கள்.

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் (ராஜ்மோகன்) அவர்கள் பட்டிமன்றத்தில் இருந்து வந்திருக்கிறார். அதனால் அவர் பேசும்போது பட்டிமன்றத்தில் பேசுவதைப்போல பேசுகிறார். நிறையக் கருத்துகள், வரலாறு பற்றியெல்லாம் பேசுகிறார். அவர் வரலாறு எல்லாம் எங்களுக்குத் தெரியும்.

### அவர் ஓடிப்போய்விட்டார்!

ஒரு வருடத்துக்கு முன்பு எங்கள் கட்சி மேடைகளில், அரசு நிகழ்ச்சிகளில் எங்கள் அரசை அதிகமாகப் பாராட்டியது, இப்போது இருக்கின்ற பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள்தான். அதற்கான ஆதாரங்கள் எல்லாம் எங்களிடம் இருக்கின்றன. இப்போது அவர் இடம் மாறிப் போனதால், மாற்றி மாற்றிப் பேசுகிறார்.

நாங்கள் கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் பதில் சொல்வார் என்று நாங்கள் எல்லாம் எதிர் பார்த்துக்கொண்டு இருந்தோம். முதலமைச்சரே அதைத்தான் சொன்னார்.

**‘திங்கட்கிழமை பதில் சொல்கிறேன். யாரும் ஓடாமல் இருங்கள்’ என்று சொல்லி விட்டு அவர் ஓடிப்போய்விட்டார்.**

அவர் சொன்ன வார்த்தையைத்தான் நான் சொன்னேன். பதில் சொல்லட்டும். அதற்காகத்தான் நாங்கள் காத்துக்கொண்டு இருக்கிறோம். இந்த அரசு காவல் துறையில் மிகவும் சீர்கெட்டுப் போயிருக்கிறது என்பதை மீண்டும் மீண்டும் நாங்கள் பதிய வைக்கிறோம். முடிந்தால், இதற்கு தகுந்த பதில்களை முதலமைச்சராவது திங்கட்கிழமை கொடுப்பார் என்று நம்பிக்கையோடு இருக்கிறோம்.

**தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டின்போது நீதியரசர் அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையில், ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறார். நான் சொல்கிறேன், அந்தக் கமிட்டி கொடுத்த அறிக்கை உங்கள் கையில் இருக்கிறது. அந்த நடவடிக்கையை இப்போது நீங்கள் எடுங்கள். உண்மையாகவே அரசுக்கு தைரியம் இருந்தால் நாங்கள் எடுக்கத் தவறிய அந்த நடவடிக்கையை நீங்கள் எடுங்கள் என்று நான் சவால் விடுகிறேன்.**

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார், துணை முதலமைச்சராக நான் இருக்கும்போது சட்டமன்றத்துக்கு வரவில்லை; என் சார்பாக, முதலமைச்சர் பதில் சொன்னார் என்று! அது நடந்தது ஒரே ஒரு நாள். எனக்கு உடல்நிலை சரியில்லை. மானியக் கோரிக்கையில் நான் பதில் சொல்ல வேண்டியது. முதலமைச்சர் எழுந்து “அவர் நாளை வந்து பதில் சொல்வார்” என்று சொன்னார். நான் அன்றைக்கு அவைக்கு வரவில்லை.

ஆனால், இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அவையிலேயே இருக்கிறார். அப்படி இருக்கும்போது, அவர் பதில் சொல்லாமல், ஏன் நீங்களெல்லாம் பதில் சொல்கிறீர்கள் என்பதுதான் எங்களின் கேள்வி.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தயாராக வந்திருக்கிறோம், 100 நாட்களாக இதைத்தான் தயார் செய்தோம் என்று சொன்னார். நாங்களும் உங்கள் முதலமைச்சரைத் தயார் செய்துவிட்டு வாருங்கள் என்றுதான் சொன்னோமே தவிர, நீங்கள்தான் சொன்னீர்கள், “தயாராக இருக்கிறார். தயாராகிவிட்டு வருவார்” என்று சொன்னீர்கள். அதைத்தான் நாங்களும் சொன்னோம்.

### அரசியல் ஆபத்தை அறிந்து நாங்கள் தயாராக இருக்கிறோம்!

இன்னொன்று, எப்போதாவது ஆபத்து அதிகமாக இருக்கும்போது நாம் கொஞ்சம் Prepared-ஆக (தயாராக) இருப்பது நல்லது. எனவே, இந்த அரசில் மிகப்பெரிய ஆபத்து இருக்கிறது. எனவே, நாங்கள் எப்போதும் ப்ரீப்பேர்டாகத்தான் (தயாராகத்தான்) இருக்கிறோம்.

நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள், தேர்தலுக்கு முன்பு நாங்கள் அவரைப்பற்றி பேசி பேசித்தான் இந்த நிலைமைக்கு வந்துவிட்டோம் என்று சொன்னார். உண்மையைச் சொல்லட்டுமா, நான், எங்கள் கழகத் தலைவர், எங்கள் முன்னணித் தலைவர்கள் யாரும் அவர்களைப் பற்றிப் பேசாமல் இருந்ததால் தான் அவர்கள் இந்தப் பக்கம் வந்துவிட்டார்கள். ஒரு வார்த்தைக் கூட அவர்களைப்பற்றி நாங்கள் பேசவே இல்லை. பேசியதற்கான ஆதாரம் ஏதாவது இருந்தால் காட்டுங்கள். ஏனென்றால், ஒரு பிரச்சாரக் கூட்டத்தில்கூட இவர்களைப் பற்றி நாங்கள் பேசவும் இல்லை. இவர்களை நாங்கள் விமர்சனமும் செய்யவில்லை. அதேமாதிரி அவர்கள் தலைவர் பேச, நாங்கள் அனுமதி கொடுக்கவில்லை என்று சொல்கிறார். எங்கெல்லாம் சட்டப்பூர்வமாக அனுமதி கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் அனுமதி கொடுத்திருக்கிறோம். அனைவருக்கும் என்ன விதிகள் பின்பற்றப்பட்டதோ அதுதான். தேர்தல் விதிமுறை வந்தவுடன், அவற்றையெல்லாம் தேர்தல் ஆணையம் எடுத்துக்கொள்வார்கள். அவர்கள்தான் முடிவெடுப்பார்கள். இது அரசு எடுக்கக்கூடிய முடிவு கிடையாது.

சில மாவட்டங்களுக்கு எல்லாம் சென்று, அவர்களின் தலைவர், இப்போது இருக்கின்ற முதலமைச்சர் பிரச்சாரம் செய்தார். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்துக்கெல்லாம் சென்றார். அங்கு ஒரு தொகுதிகூட அவர்கள் வெற்றிபெறவில்லை. இன்னும்சொல்லப்போனால் இது மெஜாரிட்டி இல்லாத அரசாகத்தான் நடந்து கொண்டு இருக்கிறது. பெரும்பான்மையே அவர்களுக்குக் கிடையாது. எங்கள் தயவில் அவர்களின் ஆட்சி இன்று நடந்துகொண்டு இருக்கிறது.

அமைச்சர் சொன்ன எஸ்.ஓ.பிஸ் எல்லாம் எந்த சம்பவத்துக்குப் பிறகு போடப்பட்டது என்று அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்பவில்லை. அதைப் பேச ஆரம்பித்தால் மீண்டும் பெரிய விவாதமாகிவிடும். நீங்கள் சரி என்று சொன்னால் நான் பேசுகிறேன். பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்தீர்கள் என்றால், நான் பேசுகிறேன்.

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.